**O.S. No.238/2021**
**Date : 17.04.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 1 **திருமதி.சங்கீதா**

IA.No.06/2026 in OS.NO.238/2021 **மனுவில்** Dated. 06.03.2026 **தேதியிட்ட உத்தரவுப்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள இரண்டு நோட்டு புத்தகங்கள் எனது அப்பா மற்றும் எனது தம்பி இருவராலும் எழுதப்பட்டுள்ளது. வா.த.சா.ஆ.7 எனது அப்பாவால் மட்டுமே எழுதப்பட்டது. எனது தந்தை அன்றாட வரவு, செலவு கணக்குகளை எழுதி வைப்பது வழக்கம் என்றால் சரிதான். அன்னன்னைக்கு வரவு, செலவுகளை அன்றைக்கே எழுதுவார் ஏதேனும் வேலை இருக்கும் பட்சத்தில் மறுநாள் வரவு, செலவு கணக்குகளை எழுதுவது வழக்கம். வா.த.சா.ஆ.7 ல் எனது தந்தை பல நபர்களிடம் கடன் வாங்கி அது தொடர்பாக வட்டி செலுத்திய விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வா.த.சா.ஆ.6– புத்தகத்தில் எனது தந்தை எனது குடும்ப நகைகளை அடமானம் வைத்த விபரமும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.7 ல் என்னிடமிருந்து எனது தந்தை ரூ.14 லட்சம் 08.11.2018 ம் தேதியன்று வாங்கப்பட்டதாக எனது தந்தை அதில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.6 ல் யார், யாரிடம் எனது தந்தை கடன் வாங்கி இருந்தார் என்ற விபரமும், விவசாயத்திலிருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்ற விபரமும், யார், யாருக்கு எவ்வளவு வட்டி செலுத்ினார் என்ற விபரமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. நகை சம்பந்தமாகவும் எனது தந்தை அதில் எழுதியுள்ளார். அவ்வாறு எனது தந்தை வட்டிக்கு பணம் வாங்கிய நபர்கள் வெளிநபர்களா குடும்ப உறுப்பினர்களா என்றால் குடும்ப உறவினர்கள். பெரும்பாலும் விவசாய

தேவைக்காகத்தான் எனது தந்தை உறவினர்களிடம் கடன் வாங்கி இருந்தார். எனது தம்பியின் படிப்பு, செலவிற்காகவும் கடன் வாங்கி இருந்தார். எனது அப்பா அம்மாவிற்கு தற்போது வரை விவசாய நிலபுலன்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் குறித்து எங்களுக்கிடையே பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

4. எனது தம்பி தான் அந்த சொத்துக்களை தற்போது வரை அனுபவித்து வருகிறார். மேற்கண்டவாறு வா.த.சா.ஆ.6 மற்றும் 7– ஆவணங்களில் திருமாறன் என்று குறிப்பிட்டிருக்கும் நபர் எனது தம்பி அவரது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடன் வாங்கியது எனது அப்பாவும், எனது சகோதரரும் தான் என்றும், இரண்டாவது பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.17 15:47:10 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.